பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 03 திங்கட்கிழமை (19.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 353

# 'பட்ஜெட்'டை எதிர்த்து இன்று வாக்களிக்கக் கூடாதுதென்று கூட்டமைப்பினருக்கு அச்சுறுத்தல்!

## பிள்ளையான் குழு விடுத்ததாக முறைப்பாடு

கொழும்பு, நவம்பர் 19

"இன்று நாடாளுமன்றத்தில் அரசின் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரை பிள்ளையான் குழு கடுமையாக எச்சரித்து மிரட்டி வருகின்றது. இது குறித்து இன்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளப்பும். இவ்விடயம் குறித்து சபாநாயகரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளோம்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றிரவு தகவல் வெளியிட்டார்.

கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான மட்டக்களப்பு மாவட்டத்தின் அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை, தங்கேஸ்வரி ஆகியோரும் அம்பாறை மாவட்டத்தின் பத்மநாதனுமே அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

கடந்த இரண்டு, மூன்று நாள்களாகத் தொலைபேசி மூலம் அவர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர். கிழக்கில் அவர்களில் ஒருவரின் நெருங்கிய உறவினர் இக்குழுவினரால் கடத்தப்பட்டிருக்கின்றார். அவரைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு எம்.பிக்களுக்கு அச்சுறுத்தல் என்பது முட்டாள்தனம்

### - பெர்னாண்டோ புள்ளே

கொழும்பு, நவ. 19

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி பொய்யானது - இது சுத்த முட்டாள்தனமான கூற்றாகும்.

- இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தமிழ் எம்.பிக்களின் பாதுகாப்பை அரசு கைநழுவிவிட்டது

### ஐ.தே.க.

கொழும்பு, நவ. 19

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பை அரசு கை நழுவ விட்டிருக்கிறது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி எப்போது? இன்றா? அல்லது டிசெ. 14ம் திகதியா?

## நேற்றிரவு வரை முடிவில்லை

கொழும்பு,நவம்பர் 19

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின்போது தற்போதைய அரசைத் தோற்கடித்துக் கவிழ்க்கும் தீவிர முயற்சிகளை பிரதான எதிர்க்கட்சிகள் இன்று மாலை வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பை ஒட்டிய வாக்கெடுப்பில் முன்னெடுக்கவுள்ளனவா அல்லது அந்த முயற்சியை டிசெம்பர் 14 ஆம் திகதி மூன்றாவது வாசிப்பை ஒட்டிய வாக்கெடுப்பில் அவை முழு அளவில் முன்னெடுக்கத் தீர்மானிக்குமா என்பது நேற்று நள்ளிரவு வரை முடிவாகியிருக்கவில்லை.

இன்றைய நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது அரசைக் கவிழ்க்க பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. கங்கணம் கட்டி நின்றாலும் மற்றைய எதிர்க்கட்சியான ஜே.வி.பி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சனிக்கிழமையன்று பல இடங்களில் மோதல்கள் நடந்தன

கொழும்பு,நவ.19

வவுனியாவின் பல்வேறு இடங்களிலும் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த மோதல்களில் புலிகளுக்குப் பாரிய இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா - பெரியாரிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற மோதலில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கின்றது.

வவுனியா - பிரப்பங்கண்டல் பகுதியில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமது ஆட்சியின் பலனை மஹிந்த விரைவில் அனுபவிக்கப் போகிறார்

### புலிகளின் பிரமுகர் பாலகுமாரன் சொல்கிறார்

கிளிநொச்சி, நவ.19

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சியின் பலாபலன்களை அனுபவிக் கும் காலம் நெருங்கி வருகிறது.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் இப்படிக் கூறியுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பாடசாலையில் நேற்று நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

நிகழ்வில் பொதுச் சுடரினை ஏற்றிவைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# 'பட்ஜெட்' தோற்றாலும் கலைப்பு இல்லை!

கொழும்பு, நவ. 19

இன்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அரசு தோற்கடிக்கப்பட்டாலும், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிடமாட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களைச் சந்தித்தபோது ஜனாதிபதியே இத்தகவலை வெளியிட்டார் எனக் கூறப்படுகின்றது.

"வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசு தோற்றாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருப்பவரை ஆட்சி அமைக்க அழைப்பேன்" - என்று ஜனாதிபதி அங்கு கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எது நடந்தாலும், தாமே முப்படைகளினதும் பொலி[illegible] என்றும், பாதுகாப்பு, நிதி போன்ற அமைச்சுகளைத் தாமே தமது கைவசம் வைத்திருப்பார் என்றும் ஜனாதிபதி கோடிகாட்டினார்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் பல்வேறு கட்சிகளில் இருந்தும் எம்.பிக்களை அமைச்சர் பதவிகளுக்குத் தாம் தெரிவு செய்து, தேர்ந்தெடுப்பார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும், அவரின் கீழ் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தபோது தனது கட்சியைச் சேர்ந்த [illegible] அமைப்பாளர்களாகத் திடீரென ஜனாதிபதி குமாரதுங்க நியமித்தமை தெரிந்ததே.

அதேபோன்ற செயற்பாட்டையே தாம் பின்பற்ற வேண்டிவரும் என இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கோடிகாட்டியிருக்கிறார் எனக் கருத முடிகின்றது.

இதேசமயம், நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் துணைவியார் எலீனா ஜெயவர்த் தனாவுக்கு இறுதி அஞ்சலி

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அகவை அறுபதில்........
35 ஆண்டுகால அரசசேவையில் நிறைவுகாணும்



திருமதி
### பொன்னம்மா இராசரத்தினம்
B, A, B. Phil, Dip., in Edu. (S.L.T.S.I)

19.11.2007

கடந்த கால் நூற்றாண்டு காலமாக
எமது கல்லூரியில் ஆசிரியையாக,
பாட இணைப்பாளராக,
பகுதித் தலைவராக,
இல்லப் பொறுப்பாசிரியராக
ஒழுக்காற்று சபை உறுப்பினராக
சேவையாற்றி ஓய்வுபெறும் தங்களை
நன்றியுடன் பாராட்டுவதோடு,
ஓய்வுகாலம் நலமாக வாழ வாழ்த்தும்...

(சி/54395)

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. ஆசிரிய சகோதரத்துவம்.

## முதலாம் வருட நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அருட்தந்தை
### யோசெவ் அ.கருணாகரர்
மண்ணில் 11.09.1916
விண்ணில் 19.11.2006

"ஆண்டவரே நீர் அபிஷேகம் செய்த தந்தையின் ஆன்மாவின் மேல் உமது பார்வையைத் திருப்பியருளும்"

*இவரது இறுதிச் சடங்கில் திருப்பலி நிறைவேற்றிய ஆயர் அவர்கள் குருக்கள், பங்கெடுத்த தி.கு. அருட் சகோதரிகள், கார்மேல் சபை அருட் சகோதரிகள், திருச்சிலுவை அருட்சகோதரிகள், மார்ட்டீன் குருமட அதிபர், மாணவர்கள், சவேரியார் குருமட அதிபர், அருட் சகோதரர்கள், உறவினர்கள், இறைமக்கள், ஆயர் இல்லப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது கோடான கோடி நன்றிகள்.*

நன்றியுடன்: கனடா தம்பி பிலிப்புப்பிள்ளை பிள்ளைகள்,
கனடா தம்பி சுவாம்பிள்ளை பிள்ளைகள்,
யாழ்ப்பாணம் தேசிய மறை ஆசிரியர்
செல்வி - குணா.

(சி/ 54408)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பர் துரைச்சாமி (சண்முகலிங்கம்)



புளியங்கூடலை பிறப்பிடமகவும் வேலணை, 8ஆம் வட்டாரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பர் துரைச்சாமி (17.11.2007) சனிக்கிழமை கனடாவில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - கண்ணாத்தா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம் பருத்தி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற அமராவதியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான நாகம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறிஸ்கந்தராஜா, காலஞ்சென்ற சாந்தராஜா மற்றும் சாந்தலட்சுமி(கனடா), விசாகராஜா, தியாகேஸ்வரன், காலஞ் சென்ற உதயசூரியன் மற்றும் உதயேஸ்வரன்,கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேஸ்வரி, இராசலட்சுமி, கந்தவேல்(கனடா), காந்தலட்சுமி, குமுதா, கமலநாயகி, கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும், லவன், பிரியதர்ஷினி, காலஞ்சென்ற கவிதா மற்றும் குகன், துரிஷிலா, றமணன், றதிஷன், பிரகாஷ், பிரசாந்தி, பிரசன்னா,கிரிசாந்தி(கனடா), திலக்சினி, ஜெனோஷா, கோபிகா, தேனுஷா, கௌசிகா, கௌசிகன், சுகிந்தன், யதுர்ஷன், சுகிந்தன், மோனிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்
தொ.பே. 0212222749
(68068)
தகவல்:
து.விசாகராஜா
(சுப்பு)

### வாரித்தம்பி சண்முகநாதன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வாரித்தம்பி சண்முகநாதன் நேற்று(18.11.2007) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி-சின்னாச்சி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நன்னித்தம்பி-தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் தங்கம்மாவின்(கௌரியம்மா) பாசமிகு கணவரும் அமரர் குமாரசாமியின் பாசமிகு தம்பியும் மகேந்திரன், இராஜேஸ்வரி, தங்கேஸ்வரன் (அமரர்), சண்முகமலர், சிவமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, பாலச்சந்திரன்(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி, Everest Tution Director), குமுதினி, செல்வநாயகம்(கிளை முகாமையாளர், சுன்னாகம்), மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் தரணிதரன், துஷ்யந்தினி, பிரசன்னா, யாழினி, கோகுலன், பிரவீணா, ஜீவிதா, பகலவன், யுகன், சர்மிளா, கஸ் தூரி, மதுரா, கரிகாலன், இராமகீர்த்தன், இராம்பேகன், அஜித், கஜந்தா, கஜானா, கதீஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயனத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு,
இணுவி[illegible]
(68066)
தகவல்:
குடும்பத்தினர்.

## கைதடி-நீர்வேலி வீதியில் போக்குவரத்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

கைதடி-நீர்வேலி இணைப்பு வீதி புனரமைக்கப்பட்டதை அடுத்து அந்த வீதிகளை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கைதடி-கோப்பாய் வீதி போக்குவரத்துக்கு தடைசெய்யப் பட்டதை அடுத்து அந்த வீதியை பயன்படுத்திய மக்கள் செம்மணி ஊடாக கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக பயணம் செய்து வந்தனர்.

கைதடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியினால் அந்த வீதியினைப்புனரமைக்க சாவகச்சேரி பிரதேசசபையினர் நிதி ஒதுக்கீடு செய்திருந்தனர்.

வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதால் கைதடி, வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேச விவசாயிகள், அரச உத்தியோகத்தகர்கள் உட்பட பொது மக்கள் மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் அவ் வீதியூடாக பயணிக்க அனுமதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

வீதியில் அமைக்கப்பட்டுவரும் பால வேலைகள் முடிவுற்றதும் வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-207)

## சத்திய சேவா நிலையத்தில் இன்று மகளிர் தினம்

யாழ்ப்பாணம், நவ.19

மகளிர் தின நிகழவுகள் இன்று திங்கட் கிழமை காலை 8.30 மணி முதல் திருநெல் வேலியில்உள்ள சத்தியசேவா நிலையத்தில் இடம்பெற உள்ளன.

ஓம்காரம், காயத்ரீ, பிரசாந்திக் கொடியேற்றம் ஆகிய நிகழ்வுகளுடன் காலை ஆரம்பமாகும் நிகழ்வு நண்பகல் வரை நடைபெறும். (1)

## கண்ணீர் அஞ்சலி



*மதுவரி சார்ஜன்*
### கந்தையா மகேந்திரம்

17.11.2007 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண மதுவரித்
திணைக்கள உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

திருமதி
### சுப்பிரமணியம் மனோன்மணி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி 18.11.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சத்திய தேவி, சுசீலாதேவி (மேல் நீதி மன்றம், யாழ்ப்பாணம்) சந்திரகுமார் (பிரான்ஸ்), தவமணிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், நவரத்தினம், சிவஞானச்செல்வன்(மருத்துவபீடம்), ஜெசிந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், நிதர்சன், நிருபன், நிரோஜன், கஜந்தினி, அனித்தா, சாருஜன் (பிரான்ஸ்), பவிசன் (பிரான்ஸ்), கவிசன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2007) திங்கட்கிழமைந.ப. 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மகேந்திரம்



(மதுவரி உத்தியோகத்தர்- மல்லாகம்)

முருகன்கோயிலடி, தம்பசெட்டி வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா மகேந்திரம் (மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்) 17.11.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-நாகமுத்து தம்பதியரின் மகனும் அனுசியாவின் (பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை, தாதிய உத்தியோகத்தர்)அன்புக் கணவரும், மயூரி (கல்வியற் கல்லூரி, முதலாம் வருடம், யாழ்ப்பாணம்), காயத்திரி (யா/வட.இந்து மகளிர் கல்லூரி, க.பொ.த.உ/த), செந்தூரன் (யா/ஹாட்லிக் கல்லூரி க.பொ.த.உ/த), மதுரா (யா/வட இந்து மகளிர் கல்லூரி, தரம்-9) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி முருகுப்பிள்ளை மகேஸ்வரி (UK), அமரர் இராசேந்திரம் (நில அளவையாளர்), அமரர் செல்லத்துரை பொன்னம்மா, வேலும்மயிலும் (UK), சபாரத்தினம் (ஜேர்மனி), நாராயணசாமி (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை, யாழ்ப்பாணம்), உதயமூர்த்தி (நோர்வே) ஆகியோரின் சகோதரரும் முருகுப் பிள்ளை, ஜெயலட்சுமி, இந்திராணியம்மா, குணமகள், இந்திராணி, மாலதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2007) திங்கட் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசெட்டி வீதி,
முருகன் கோயிலடி, பருத்தித்துறை. (சி/54416)
தகவல்:
குடும்பத்தினர்.

### தங்கராசா சுஜீபன்



(Halo Trust உத்தியோகத்தரும், திறந்த வெளி பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவனும்)

மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் 501, ஸ்ரான்லி வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சுஜீபன் 16.11.2007 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தங்கராசா - சொர்ணகாந்தி தம்பதியரின் அன்பு ம[illegible]னும் சுபாஜினியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2007) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

501, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (68064)
தகவல்:
குடும்பத்தினர்.

### லெஸ்லி தேவபாலசிங்கம் நாகலிங்கம்
LESLEY THEVABALASINGAM NAGALINGAM

(RETD TEACHER, MAHAJANA COLLEGE TELLIPALAI, DRIEBERGE COLLEGE, CHAVAKACHCHERI, RETD LECTURER, PALALI TRAINING COLLEGE)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொட்டகலையை வசிப்பிடமாகவும் கொண்ட லெஸ்லி' தேவபாலசிங்கம் நாகலிங்கம் சனிக்கிழமை (17.11.2007) கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற திருமதி அன்னபூரணியின் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம்- பரஞ்ஜோதி தம்பதியரி[illegible]க னும் தேவமலர் (TEACHER, ST.PATRICKS- TALAWAKELE ), [illegible]வ சுகந்தி, (GERMANY), தேவசீலி (GERMANY), தேவானந்த் (GERMANY) ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான யோகமணி - நேசமாணிக்கம், தேவபாலன், தேவமணி ராமநாதன் மற்றும் பூபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் PASTOR ANDEREW (KOTAGALA), ROY (GERMANY), MARY (GERMANY) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற நடராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.11.2007) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடாகம சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

PASTOR M.K.ANDERW,
31, SAKTHIPURAM, KOTAGALA,
T.PHONE: 0514921093. (68065)
தகவல்:
திருமதி ராணி புலேந்திரன்
(மருமகள்).

### தம்பாப்பிள்ளை இராமசாமி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப் பிள்ளை இராமசாமி அவர்கள் நேற்று (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் குகேந்திரன், தவேந்திரன், இரவீந்திரன், இராசேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதி, வாசுகி, மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் குமுதினி, கிருஷ்ணா, குகன், அனுஷன், தர்சிகா, தினேஸ், சஜீபன், கார்த்திகா, ஜிந்துகா, கேசவன், றமெக்கா, கிரிசாந், ஜெயப்பிரியன், பிரவீனா, மாதுனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (68069)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடமைப்புத் திட்ட பயனாளிகளுக்கு சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.19

தென்மராட்சி பிரதேசத்தில் உலக வங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கு சிமெந்து வழங்கப்பட்டது.

பிரதேசத்தில் முழுமையாக சேதமடைந்த வீடுகளையுடைய பயனாளிகளுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்க 30 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து 400இற்கு மேற்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீடமைப்புத் திட்டத்தின் தற்போதைய தள நிலைமைக்கேற்ப சிமெந்து பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் வழங்கப்பட்டன. (1-207)

## பரிசளிப்பு விழாவும் கலை விழாவும்

வலி.வடக்கு நவ,19

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று திங்கட்கிழமை 9 மணிக்கு பாடசாலை அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி ச. நாகராசா கலந்து கொள்வார்.

நினைவுப் பேருரையை இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் சோ. சபாரட்ணம் வழங்கவுள்ளார். (203-86)

## தென்மராட்சி வலயத்தில் மனைப்பொருளியல் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பயிற்சி வகுப்புகள் நாளை இரு நிலையங்களில் நடத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆகிய நிலையங்களில் விசேட வகுப்புகள் துறைசார் ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ளதாகவும் பங்குபற்றும் மாணவர்களுக்கு பாடம் தொடர்பான செயன்முறை கைநூல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் தமக்கு வசதியான நிலையத்தில் விசேட பயிற்சி வகுப்பில் பங்குபற்றலாமெனவும் அவர் தெரிவித்தார். (203-207)

# உணவகங்களில் கை துடைப்பதற்கு பாடப்புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன

நல்லூர்,நவ.19

யாழ்.நகரப் பகுதியிலும் தீவுப் பகுதியிலும் உள்ள உணவகங்களில் கைதுடைப்பதற்கு பாடப் புத்தங்கள் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அரசு பாடசாலை மாணவர்களுக்கு வருடம்தோறும் இலவச பாடப் புத்தகங்களை வழங்கி வருகின்றது.

எனினும் அனேக மாணவர்கள் தமக்குரிய இலவச பாடநூல்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

வருடமுடிவில் மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பாடப்புத்தங்கள் மீள ஒப்படைக்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் சாதாரண தர மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்கு உதவியாக அவர்களிடமிருந்து புத்தங்களை மீளப்பெறுவதில்லை.

அனேகமான உணவங்களில் சாதாரண தர மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்களே கூடுதலாக கை துடைப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

இவை புதிய புத்தகங்களாகவே காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் புத்தகங்கள் ஏன் இவ்வாறு உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை கற்றலுக்கு உதவாதவையா என்று உண வகங்களுக்குச் செல்வோர் மத்தியில் எழுந்துள்ளது. (203-111)

## மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் 'நிக்கொட்' திட்டத்தில் 200 வீடுகள்

யாழ்ப்பாணம்,நவ.19

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் நெதர்லாந்தின் நிதி உதவியுடன் தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளில் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை - ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நெடுந்தீவிலும் வீடமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அங்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 47 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாத இறுதிக்குள் இந்த வேலைத் திட்டங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வீதி அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203-111)

## வலி.தென் மேற்கிலும் மரக்கறி விலை உயர்வு

வலி. தென்மேற்கு நவ.19

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. மானிப்பாய் சந்தை, சங்கானைச் சந்தை, பண்டத்தரிப்புச் சந்தை ஆகிய சந்தைகளில் கத்தரிக்காய், பயிற்றங்காய் பாகற்காய், கரட் ஆகிய மரக்கறிகள் கிலோ 150 ரூபா முதல் 250 ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றன. கீரை ஒரு பிடி 20 ரூபாவாக விற்கப்படுகின்றது. பல்வேறு விரதங்கள் இந்து சமயத்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் மரக்கறிகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. மாரி மழை காரணமாக இப்பிரதேசத்தில் வயல் காணிகளில் மரக்கறி செய்கை மிகவும் குறைவாகவே விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (1-135)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம். நவ,19

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் ஆண், பெண் இரு பிரிவினருக்கும் இடையில் டிசெம்பர் இரண்டாம் திகதி ஒருநாள் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

கூடைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சங்கச் செயலாளரிடம் வழங்குமாறு கூறப்பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குகள் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ளன. (203)




## விக்கிரகங்கள் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், நவ,19

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இந்து ஆலயத்தில் விக்கிரகங்கள் எதிர்வரும் 22ஆம் திகதி பிரதிஷ்டாபிசேஷகம் செய்யப்படவுள்ளன.

விநாயகர், ஆஞ்சநேயர், முருகன் ஆகிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாகவும், நகாசபை உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியோரினால் இந்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டதாகவும் நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (203-207)

# நல்லூர் கோட்ட தமிழ்த்தினப் போட்டி யாழ். இந்து 11 பிரிவுகளில் முதலிடம்

நல்லூர் கோட்ட மட்டத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 11 முதலிடங்களையும் மூன்று இரண்டாமிடங்களையும் பெற்று வலய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

பேச்சு, பாட்டு, இசை, பா ஓதல், நடனம், நாடகம், விவாதம், வில்லுப்பாட்டு போன்ற பல்வேறு போட்டிகள் நேற்று நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் இந்துக் கல்லூரி வெற்றிபெற்ற விவரம் வருமாறு-

பிரிவு 2

பேச்சு, பாட்டு, இசை தனி ஆகியவற்றில் முதலிடம்.

பிரிவு 3

பேச்சு, பா ஓதல் - முதலிடம், இசை தனி - இரண்டாம் இடம்.

பிரிவு 4

பா ஓதல் முதலிடம்

பிரிவு 5

பேச்சு - முதலிடம், பா ஓதல் - முதலிடம், இசை தனி - இரண்டாமிடம்.

வாள் நடனம் - முதலிடம், நாடகம் - முதலிடம், விவாதப் போட்டி - முதலிடம், வில்லுப்பாட்டு - இரண்டாமிடம். (202)

# ஸ்ரான்லி வீதியில் சுடப்பட்டவர் 'ஹலோரஸ்ட்' நிறுவன ஊழியர்

## திருவிழாவுக்குச் சென்று வீடு திரும்பியதும் கொலை

யாழ்ப்பாணம், நவ.19

சூட்டுக் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த வெள்ளி இரவு ஒப் படைக்கப்பட்ட சடலம் 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியருடையது என்று இனங்காணப்பட்டது.

யாழ். ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த தங்கராசா சஜீவன் (வயது 23) என்பவரின் சடலமே ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று முன்தினம் விசாரணைகளை நடத்தினார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற திருக்கல்யாணத் திருவிழாவுக்குச் சென்றவர் மாலை 6.30 மணிக்கு வீடு திரும்பியதாகவும் அந்தநேரம் வீட்டில் தாய் இல்லாததால் அவரைத் தேடி அயல் வீட் டுக்கு சென்றார் என்றும், அப்போது பின்னால் வந்த ஆயுததாரிகள் சுட்டு விட்டு தப்பி விட்டனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

- பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# விசேட தேவை உள்ளவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் வலிகாமத்தில்

வலி.வடக்கு, நவ.19

வலிகாமம் கல்வி வலயத்தில் விசேட தேவை உள்ளவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் 160 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 35 பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவை உடைய மாணவ மாணவிகளுடன் ஆக் நிறுவனம், சிவபூமி நிறுவனம் மற்றும் வாழ்வக நிறுவனம் ஆகியவற்றில் மாற்று ஆற்றல் உள்ள மாணவர்களையும் இணைத்து இந்த மெய்வன்மைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

50 மீற்றர், 75 மீற்றர், 100 மீற்றர்,200 மீற்றர் ஓட்டப்போட்டிகளுடன் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல், நின்று நீளம் பாய்தல் உட்பட மற்றும் பல போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக ஒரு கல்வி வலயத்தில் இத்தகைய மெய்வல்லுநர் போட்டி இடம்பெறுகின்றமை சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இப்போட்டிகளுக்கான ஏற்பாட்டை வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் நி.முருகானந்தன் மேற்கொண்டுள்ளார். (203-86)



2006 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையினர் அண்மையில் பரிசளிப்பு நிகழ்வு ஒன்றை உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக் கலையரங்கில் நடத்தினர். நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா வங்கியின் பரிசினை வழங்குவதையும் மற்றொரு மாணவிக்கு வங்கியின் வடவலயப் பொதுமுகாமையாளர் க.த.ஆனந்தராசா வங்கிப் பரிசினை வழங்குவதையும் பரிசுப் பொருள்களுடன் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சுந்தா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 21 • 08 • 1908



மறைவு 29 • 11 • 2006

### திருமதி பூதப்பிள்ளை சின்னம்மா

அன்பின் திருவுருவே - அம்மா ஆடி அடங்கிய உன் வாழ்க்கை
ஒரு வருடம் கண் இமைப் பொழுதில் ஓடி மறைந்ததம்மா
எம்துயரம் ஆறவில்லை என்றென்றும் ஈரவிழிகளுடன்
உங்களுக்காகப் பிரார்த்திப்போம்.

ஜெனனி பவன்,
அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (67965)

அன்பு மகன்,
சண்முகநாதன் குடும்பத்தினர்
(பட்டு).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 - 08 - 1930



மறைவு 20 - 10 - 2007

### திருமதி கந்தையா மகேஸ்வரி

(20.10.2007) அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலை பேசி, தந்தி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (19.11.2007) திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (68057)

கிருஷ்ணதாசன் (மகன்)
குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

934 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம்

10 18 48 51

16-11-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5312512 - 5327579

ஜக்பொட் பரிசு ரூபா. 1,747,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 331,348 | 10/- | 3,313,480/- |
| 2 இலக்கங்கள் | 30,448 | 20/- | 608,960/- |
| 1 இல. + லக்கினம் | 30,056 | 30/- | 901,680/- |
| 2 இல. + லக்கினம் | 2,768 | 100/- | 276,800/- |
| 3 இலக்கங்கள் | 793 | 500/- | 396,500/- |
| 3 இல. + லக்கினம் | 91 | 5,000/- | 455,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,747,650/- | - |
| மொத்தம் | | | 6,352,420/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 395,513 | | 7,375,920/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,487,600/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5323316-6-27 |
| கேகாலை | 5313254-8-02 |
| ஹம்பாந்தோட்டை | 5314718-9-38 |
| மாத்தறை | 5314148-5-49 |
| கண்டி | 5313763-3-17 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



IIS

விண்ணப்பித்து விட்டீர்களா?

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

விண்ணப்ப முடிவுத்திகதி
30-11-2007

IIS உங்கள் ஒளிமயமான
எதிர்காலத்தின் வழிகாட்டி

INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock Tower Road, Jaffna



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு:

- ராஜீவ் – நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- மதுரா – ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம் – சிவலிங்கப்புளியடி.
- P. ரவி – தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- சிவம் ஸ்ரோர்ஸ் – ஏழாலை.

(67968) T.P.No: 222 2867, 222 3529


## சமுர்த்தி நிவாரணப் பொருள்கள் குறைவு என்று மக்கள் கவலை

நவாலி,நவ.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்கள் பல தமக்கு சமுர்த்தி நிவாரணம் மிகவும் குறைவாக உள்ளதாக கவலை தெரிவிக்கின்றன.

7பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு 4கிலோ அரிசி, 4கிலோ மா, 250 கிராம் சீனி, 100 கிராம் பருப்பு ஆகியவையே வழங்கப்படுகின்றது. தமது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு இது எவ்வாறு போதும். எத்தனை நாள்களுக்குப் போதும் என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் சிலர் எமக்கு வருமானம் இல்லை வேறு நிவாரணம் மாற்றித்தாருங்கள் என்று கிராம சேவையாளர் அலுவலகங்களில் கேட்டு நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது. (203-100)

## வலி.தென்மேற்கு பிரதேச நூலகத்தில் சைக்கிள் திருட்டுகள்

வலி.தென்மேற்கு, நவ.18

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப பணிமனையின் கீழ் பகுதியில் அமைந்துள்ள சைக்கிள் தரிப்பிடத்தில் விடப்படும் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டுப்போவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இத்தரிப்பிடத்தில் தமது சைக்கிளை நிறுத்தி பூட்டி வைத்து விட்டு மேல் மாடியிலுள்ள பொது நூலகத்தில் கடமையாற்ற சென்ற பெண் அலுவலர் ஒருவரின் சைக்கிளும் மற்றுமொரு அலுவலக ஊழியரின் சைக்கிளும் திருட்டுப்போயுள்ளன.

பொது நூலகத்தில் பத்திரிகை வாசிக்க தமது சைக்கிளை தரிப்பிடத்தில் நிறுத்தி விட்டு சென்ற வாசகர் ஒருவரின் சைக்கிளும் திருட்டுப் போயுள்ளது. பூட்டிய நிலையில் இத் தரிப்பிடத்தில் விடப்படும் சைக்கிள்கள் கூட திருடப்படுவதால் இங்கு தங்கள் சைக்கிள்களை நிறுத்தி வைப்பவர்கள்மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (1– 135)

## தென்மராட்சியில் காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி பிரதேசத்தில் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தினமும்200இற்கு மேற்பட்டோர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் பிரதேச மருத்துவமனைகளில்சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பனி கூடுதலாக உள்ளதால் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் தொகை அதிகரித்து வருவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (203-207)


வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## கண்ணீர்க் காணிக்கை

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்கோயில்
தர்மகர்த்தாக்கள் சபையின் முன்னாள் தலைவர்

### செல்லையா சச்சிதானந்தம்

அவர்கள் 12.11.2007 அன்று லண்டனில் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்

கும்பழாவளை,
அளவெட்டி.

தர்மகர்த்தாக்கள் சபை,
தொண்டர்சபை.

(சி/54402)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

கர்த்தர் தந்தார் 17 ★ 04 ★ 1950



கர்த்தர் எடுத்துக் கொண்டார் 19 ★ 10 ★ 2007

### அமரர் சேவுகன் ஜெயராஜ் (சித்தப்பா)

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்"

அப்பா உமை பிரிந்து ஒரு திங்கள் ஆகிவிட்டது
நெஞ்சம் பொறுக்காது உங்களது பிரிவை
அன்புடன் அரவணைத்து சிறப்புடன் எமை
ஆளாக்கிய அப்பாவே!
உங்களதுமுகம் காணத் துடிக்கின்றோம்
உங்கள் கனவை நனவாக்கிக் காட்டும்
வரை ஓயமாட்டோம்!
அதுவரை நிம்மதியாய் உறங்குங்கள்.

(19.10.2007) அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது வீட்டுத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (19.11.2007) திங்கட்கிழமை மு.ப11மணியளவில் நடைபெறும் நினைவு ஆராதனையில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்மாசாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

களனை,
புலோலி மேற்கு. (68060)

குடும்பத்தினர்.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2006 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | | மக்கள் வங்கி யாழ்/கன்னாதிட்டி - 284 |
| 2 | சேவைநிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ் பல்கலைக்கழகம் - 162 | 2007.12.01 | |
| 6 | சேவை நிலையம் திருநெல்வேலி | 2007.12.02 | |
| | | 2007.12.03 | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 2007.12.04 | |
| 8 | சேவைநிலையம், இணுவில் | 2007.12.08 | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | 2007.12.09 | |
| 10 | சேவை நிலையம், மானிப்பாய் | 2007.12.10 | |
| 11 | காங்கேசன்துறை - 031 | 2007.12.11 | |
| 12 | சேவைநிலையம், மல்லாகம் | & | |
| 13 | அச்சுவேலி - 107 | | |
| 14 | சங்கானை - 108 | 2007.12.12 | |
| 15 | சுன்னாகம் - 109 | | |
| 16 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 17 | நெல்லியடி - 106 | | |
| 18 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/54394)

உதவிப் பொதுமுகாமையாளர்,
வடவலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு புலோலி மெ.மி.த.க. பாடசாலை யில் நடைபெற்றபோது தமிழ்மொழி பாடச் செயலமர்வில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களையும் வளவாளர்களான திருமதி அ.தேவகி, திருமதி பொ. பெண்ணரசி, திருமதி எஸ்.முரளிவதனி ஆகியோரை முதலாவது படத்திலும், ஆரம்ப் பிரிவு சுற்றாடல் கல்வியில் மருந்துச் செடிகள் தொடர்பாக வளவாளர் வ.கருணாமூர்த்தி ஆசிரியர்களுக்கு விளக்குவதை இரண்டாவது படத்திலும் கணலாம். (160)

## கைதடியில் உரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.19.

கைதடி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மானிய விலையில் உரவகைகள் வழங்கப்பட்ட போது உரவகைகள் கிடைக்காத 43 நெற்செய்கையாளர்களுக்கு கடந்த வாரம் யூரிய உரம் வழங்கப்பட்டது.

நெற் செய்கை மேற்கொள்ளப்படும் நெற்காணியின் பரப்புக்கு அரைக் கிலோ வீதம் யூரியா உர்ம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டபோது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களின் பரப்புக்கு மூன்றரை கிலோ யூரியா வீதம் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (203-207)

## கிளிநொச்சிக்கு பொருள்கள் எடுத்துச் செல்வதில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது

### கிளிநெச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.19

கிளிநொச்சிக்கு உலர் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசியக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு உலர் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 35 தொடக்கம் 36 வரையான லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்து வரவேண்டிய நிலையில் 16 லொறிகளில் மட்டும் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. இதனால் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் விவசாயச் செய்கையாளர்களுக்கு வவுனியாவில் உரங்கள் இல்லை. உரவகைகளை கொழும்பிலிருந்தே எடுத்து வரவேண்டியுள்ளது. கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்பட்ட மரமுந்திரிகை, புகையிலை ஆகியவற்றை விற்பனைக்காக வவுனியா எடுத்துச் செல்ல வழி செய்யப்பட்டுள்ளது- என்றார். (203)

## சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் பலவகை உதவி

சங்கானை,நவ.19

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளது.

வகுப்பறைக்கான கொட்டகை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் வகுப்பறைகளுக்கு மறைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நூல் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கிக் கொடுத்துள்ளதுடன் தளபாடங்கள் கொள்வனவுக்கென 35 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

விளையாட்டு உபகரணங்கள், இசைத் துறைகருவிகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றின் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

அத்துடன் விசேட தேவையுள்ள மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கேற்ற செயற்றிட்டங்களையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அத்துடன் முதலுதவிப் பெட்டி சமையல் பாத்திரங்கள் என்பனவற்றையும் வழங்கியுள்ளது.

மாணவர்களுக்கு நவீன கற்றல் செயற்பாடுகளைமேற்கொள்வதற்கு வசதியாக கணனி, பிறிண்டர், புறஜெக்ரர், லெமினேற்றர் போன்ற கருவிகளை விரைவில் வழங்கவுள்ளதாக இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (203-29)



பங்களாதேஷில் இடம்பெற்ற சூறாவளியின் போது சேதமடைந்த வீடுகளில் ஒரு சில....

## குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

*(15.11.2007 முதல் 29.11.2008 வரை)* - சோதிடர் கிருஷ்ணா.

### மீனம்

பூரட்டாதி 4, உத்திரட்டாதி 1-4 ரேவதி 1 - 4

ராசினாதன் குருபகவான் 10இல் வருகிறார். இது நன்மை இல்லை என்றாலும், அவர் பார்வை 2இல், 4இல், 6இல் படுவது பயன் தரும். வரவுகள் கூடும். வரவில் இருந்த தேக்க நிலை மறையும். வீட்டு பிரச்சினைகள் தீரும். சுபநிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். சிலருக்கு மேல் நாட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும். கடன்கள் குறையாது. புது கடன்கள் வாங்க வேண்டியது வரும். அரசு அலுவல்கள் தாமதமாகும். மேலதிகாரிகள் சுமுகமாக நடந்து கொள்ள மாட்டார். பிரச்சினைகளை சந்திக்காமல் இருப்பது நல்லது. மைத்துனர்கள் வம்புக்கு வருவார்கள். தாயாரின் உடல் நிலை பாதிக்கலாம். அவர்கள் மருத்துவ செலவு கூடும். வாகனங்கள் சில சமயம் இடக்கு செய்யும். அவைகளின் செலவுகள் கூடும். பிரயாணங்களில் கவனம் தேவை. விலையுயர்ந்த பொருள்கள், ஆபரணங்கள் திருட்டு போகலாம். பொரியோர்களிடம் மதிப்பு குறையாமல் நடக்கவேண்டும். கோயில் குளங்கள், புண்ணிய யாத்திரை தலங்களுக்கு பிரார்த்தனை செய்யவும். தொழிலில் முன்னேற்றமும், வருமானமும் தடைபடாமல் வரும். அதிர்ஷ்ட திகதிகள் 3.6,9,12,15,18,21,26.

*பெண்களுக்கு:-* உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சியால் குரு பகவான் உங்க ராசி 10ஆம் இடத்திற்கு வருவதால் நீங்கள் நினைக்கிற மாதிரி. விசேடமாக இருக்காது என்றாலும் தெய்வ வழிபாடு மூலம் சில நன்மைகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருக்கும் பெண்கள் கவனமாக இருப்பது நன்று. பல வழிகளில் நஷ்டங்கள் வரலாம். எல்லா காரியங்களும் மனதிற்கு திருப்தியில்லாமல் இருக்கும். அடிக்கடி உடல் நலத்தில் சிறு குறைபாடுகள் வரலாம். மருத்துவ செலவுகளும் உண்டு உடல் நிலை சோர்வாக இருக்கும். மன நிம்மதியும் குறைவாகத்தான் இருக்கும். இந்த சமயத்தில் தேவையில்லாத பிரச்சினைகள், அனாவாசிய சிக்கல்கள், வீண் வம்புகள் கூட வீடு தேடி வரும். கவனமாக இருந்தால் பிரச்சினைகள் விலகிப் போகும். சுப காரியங்கள் கிட்ட வந்து தட்டிப் போகும் வாய்ப்புகள் அதிகம். அதற்குரிய பரிகாரங்கள் செய்து நிவர்த்தி காணவும். 10-05-2008 முதல் 07-09-2008 குரு வக்கிர சஞ்சாரம் செய்வதால் சில மாறுதல்களும், சில சாதகங்களும் நடைபெறும். சில மகிழ்ச்சியான தகவல்கள் வரும். சொந்த வீடு வாங்கும் நேரம் வரும். ஆரம்பத்தில் தடங்கலாக இருந்தாலும் 4,5 மாத இடைவெளிக்குப் பிறகு காரிய சித்தி கைகூடும்.

*மாணவர்களுக்கு:-* இந்த குரு பெயர்ச்சியால் படிப்பில் சிறு சிறு தடைகள் வரலாம். உடல் நிலை பாதிப்பால் கூட படிப்பில் தடைகள் வரலாம். எனவே விக்கினங்களை தீர்க்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு வந்தால் தடைகள் மாறிப் போகும். மறதி கூடுதலாக இருக்கும். தெய்வ சிந்தனையோடு படித்தால் அதுவும் மாறிப் போகும். இந்த சமயத்தில் வண்டி, வாகனத்தில் பிராயணம் செய்யும் போது கவனமாக இருத்தல் மிகவும் நன்று. ஆனால் 10-05-2008 முதல் 07-09-2008 வரையில் மந்திமம் மாறி படிப்பு நன்றாக வரும் வியாழக்கிழமைகளில் குருபகவானை வழிபடுவது நன்று.

*அரசாங்க வேலை செய்பவருக்கு:-* இந்த குருப் பெயர்ச்சி அதாவது 10ஆம் இட குருவால் எல்லா காரியங்களும் பறி போகத்தான் வாய்ப்பிருக்கிறது. எனவே பொறுமையோடும், நிதானத்தோடும் ஆலய வழிபாடு மூலம் காரிய சித்தி உண்டாகும். எதில் சென்றாலும் பிரச்சினைகள் வரும். மேலதிகாரிகளிடமும் இருந்து தொந்தரவுகள் வரலாம். யாரிடமும் வாயைக் கொடுத்து வம்பை விலைக்கு வாங்காதீர்கள். மேலும் அரசாங்க அபாராதமுமு் வரும் சந்தர்ப்பங்களும் உண்டு. பணம் விரயமாவதே கூடுதலாக இருக்கும். யாருக்கும் முன் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம். பிறகு 10-05-2008 முதல் 07-09-2008 வரை குரு வக்கிரம் பெறுவதால் எல்லா காரியங்களும் நல்ல பலன்களைக் கொடுக்கும் அந்த கால கட்டத்தில் மனநிம்மதியும் பண இலாபங்களில் கிடைக்கும். எந்த ஒரு செயல் ஆனாலும் தெய்வ சிந்தனையோடு சென்றால் பலன் உண்டு.

சொந்த தொழில் செய்பவருக்கு:- இந்த குரு பெயர்ச்சியால் ஆரம்ப காலத்தில் சிறு சிறு விரயங்கள் வந்தாலும், பிற்பகுதயில் தொழில் இலாபகரமாக நடைபெறும். இந்த கால கட்டத்தில் விநாயகப் பெருமானையும், அம்மனையும், குருபகவானையும் வழிபடுவது சிறப்பாகும். ஆரம்பகாலத்தில் வியாபாரத்தில் சிறு விரயம் ஏற்பட்டு வருமானங்கள் குறைய வாய்ப்புண்டு பணம் சமயத்துக்கு வராமல் பாடாய் படுத்தும் புதிய முயற்சிகளில் இறங்க வேண்டாம் செய்யும் தொழிலை தெய்வீகமாக செய்தால் காரியங்கள் நடைபெற்றுப் போகும். இந்த குரு பெயர்ச்சி காலத்தில் வீண் வம்புகளிலும், சிக்கல்களிலும் போகாமல் இருப்பது நன்று. வேலையாட்களால் பிரச்சினைகளும், விரயங்களும் வரலாம் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. 10-05-2008 முதல் 07-09-2008 வரை மிக மிக சிறப்பாக இருக்கும்.

## விடுதலைப் புலிகள் குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என்கிறார் முகர்ஜி

சென்னை,நவ.19

தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று மத்தியூ அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி அண்மையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு விடுதலைப் புலிகள் மீதான மத்திய அரசின் நிலைப்பாடு மற்றும் கொள்கை குறித்து விளக்கம் கேட்டு கடிதம் எழுதி இருந்தார்.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியின் கடிதத்திற்கு வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி பதிலளித்துக் கடிதம் அனுப்பி உள்ளார்.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகள் மீதான மத்திய அரசின் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை.

அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக் குமாறு இலங்கை அரசை அவ்வப்போது மத்திய அரசு முறைப்படியாக கேட்டுக்கொண்டுள்ளது. இதற்குப் பதிலளித்துள்ள இலங்கை அரசு இந்தியாவின் கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது என்று அமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்களின் ஒட்டுமொத்த உள்ளுணர்வை புரிந்து கொள்ளாதவர் கருணாநிதி

### குற்றம் சாட்டுகிறார் வைகோ

சென்னை, நவ.19

முதலமைச்சர் கருணாநிதி உலகத் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளா வைகோ குற்றம்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க சென்னையில் பொலீஸ் தடையை மீறி ஊர்வலம் செல்ல முயன்ற ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்க தலைவர் நெடுமாறன் உட்பட 262 பேர் கைதுசெய்யப்பட்டு புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரையும் பிணையில் விடுதலை செய்யக்கோரி எழும்பூர் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி முருகானந்தம், அனைவரையும் நிபந்தனையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து சனிக்கிழமை காலை வைகோ, நெடுமாறன் உட்பட 262 பேரும் புழல் சிறையிலிருந்து விடுதலையானார்கள். சிறைவாயிலில் வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது-

தமிழ் உணர்வுடன் மரணக்குழிக்கு சென்றுள்ள தமிழர்களுக்காக அனைத்து நாடுகளுடனும் பேச்சு நடத்தி வெற்றி கண்ட மாவீரன் தமிழ்ச்செல்வன், குண்டு வீச்சில் வீரமரணமடைந்தார். இதற்காக தமிழ் உணர்வு உள்ள பல்லாயிரக் கணக்கான தோழர்கள் இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமைதிப் பேரணி நடத்தினோம். உலகத் தமிழர்களின் ஒட்டு மொத்த உள்ளுணர்வை புரிந்து கொள்ளாத முதலமைச்சர் கருணாநிதி அடக்குமுறை மூலம் என்னைப் போன்ற தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தார்.

அதேசமயம், தமிழ்ச்செல்வனுக்காக அவர் கவிதாஞ்சலியும் செலுத்தினார். இது உலகத் தமிழர் அனைவரையும் ஏமாற்றும் செயலாகும். அரசு விடுவிக்கும் என்று எதிர்பார்க்காமல் நீதிமன்றம் மூலம் விடுதலையாகியிருக்கிறோம். - இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய நிர்வாகச் செயலாளராகவும், திருப்பணிச்சபைச் செயலாள்ராகவும் பெரும் தொண்டாற்றிய

**அமரர் செல்லையா சச்சிதானந்தம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கேணிக்கரை வைரவர் ஆலயம், அளவெட்டி.* (சி/54403)

ஆலய தர்மகர்த்தாக்கள் சபையும் வழிபடுவோரும்.

## உனது 25 ஆவது வயதில் ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலை...

மனம் மகிழ வந்த நாள் 31 . 12 . 1982



மனம் நெகிழச் சென்ற நாள் 30 . 11 . 2006

**செல்வன் ஜெயக்குமார் கிரிஜன்** *(கிரி)*

திதி:- 19.11.2007 வளர்பிறை தசமி


*எம் வாழ்வின் விடி வெள்ளியாய்*
*எம்முடன் வந்துதித்தாய்*
*பாதியிலே நீ எம்மை விட்டு பிரிந்து*
*பன்னிரு திங்கள் சென்றதையா*
*ஆறவில்லை எம் மனம்*
*நீ விட்டுச் சென்ற சுவடுகள்*
*என்றும் எம்மை வழிநடத்துமையா.......*

(67983)

"செல்வ பதி", மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.

என்றும் உன் தீராத நினைவுகளுடன்: அம்மா, அப்பா, சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இ.பிரபாசங்கர்**

(குஞ்சுபபி)

மலர்ந்தது 17 ✱ 10 ✱ 1967

குவிந்தது 30 ✱ 11 ✱ 2006

திதி: கார்த்திகை வளர்பிறைத் தசமி 19.11.2007

ஆண்டொன்று போனாலும் ஆறாத எம்துயரமதை
அன்பான உங்கள் நினைவுகளில் அமிழ்த்துகிறோம் ஐயா!
உற்றாரும் சுற்றத்தாரும் மற்றும் அன்பரும் உமதருமை கூற
ஆற்றுகிறோம் எம்மை உம் திருப்பாதம் பணிந்து!

*விடத்தற்பளை, உசன்.* (67979)

மனைவி, பிள்ளைகள், அம்மா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணபதிப்பிள்ளை குமாரசேகரம்**

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், மின்சாரசபை)

அன்னையிடம் 23 ✱ 01 ✱ 1926

ஆண்டவனிடம் 30 ✱ 11 ✱ 2006

திதி: 19.11.2007

காதல் நிறை கணவனாக, கனிவுள்ள அப்பாவாக,
பாசமுள்ள மாமனாக, பண்புமிகு பேரனாக,
வளமான வாழ்வளித்து வானுறையும் தெய்வமே!
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்
உடனுறைவீர் ஈசனுடன்.

K.K.S. வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (67994)

*பிரிவால் துயருறும்:-* குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

# அமரர் தம்பையா வேலாயுதம்

(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, தபால், தொலைத்தொடர்புத் திணைக்களம், கொழும்பு)

அன்னை மடியில் 08.07.1924

இறைவன் பாதங்களில் 21.10.2007



குடும்பத்தின் குல விளக்காய்
எமது வாழ்வில் ஒளி தந்து
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய
பண்பான தலைவரே!
அணையாத ஜோதியாக எங்கள் இதயங்களில்
வாழ்கிறது உங்கள் நினைவுகள்
ஆண்டாண்டு காலம் சென்றாலும்
ஆறாது எம் துயரம்
எங்கள் கண்ணீர்ப் பூக்களை உங்களுக்கு
காணிக்கையாக்கி,
உங்கள் ஆத்மா இறைவன் பொற்பாதங்களில்
அமைதி பெற வேண்டுகின்றோம்.

எங்கள் அன்புத்தந்தை விஜயதசமி நன்னாளில் அன்னை பராசக்தியின் திருவடியை அடைந்த செய்தியினை அறிந்து, விரைந்து வந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.11.2007) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் நுணாவில் பிள்ளையார் கோயிலில் நடைபெறும். அதைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மைத்துனர்:* ஜெயபாலசிங்கம் குடும்பம், பிள்ளைகள், மருமக்கள், பெறாமகள்.

*"அப்பாட்டி ஒலை",*
*அணிஞ்சிலடி ஒழுங்கை,*
*துன்னாலை மேற்கு, கரவெட்டி.*

(சி/54404)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புலிகளின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் ஜே.வி.பி.

''மஹிந்தவின் அரசு படைப்பலத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்க விரும்புகின்றது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, அதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையில் கட்டிவிட எண்ணுகின்றது. இந்தப் போர் முனைப்புச் செயற்பாட்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் செத்துச் செயலிழந்து போய்க் கிடக்கின்றது. ஒப்பந்தம் கிழிக்கப்படாமலேயே உக்கிப்போன தாளாகி, உருக்குலைந்து கிடக்கிறது. புலிகளின் இலக்குகளுக்கு எதிராக மும்முனைகளிலும் தாக்குதல் தொட ரும் என அறிவித்து, மஹிந்த அரசு ஒப்பந்தத்திற்கு ஈமக்கிரியைக்ளையும் நடத்தி முடித்திருக்கின்றது.''

- இது கடந்த வருடம் மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் தெரிவித்த கருத்துகள். இதே உரையில் மற்றொரு விடயத்தையும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

''மஹிந்த உள்நாட்டில் தமிழின அழிப்புப் போரை நடத்திக்கொண்டு, உலக நாடுகளுக்கு சமாதானம் விரும்பும் ஓர் அமைதிப் புறாவாகத் தன்னை இனங்காட்ட முனைகிறார். தனது ஏமாற்று நாடகத்துக்குப் பக்கத்துணையாக அனைத்துக் கட்சி மாநாட்டை அவர் கூட்டியிருக்கிறார். எந்தவொரு பிரச்சினைக்கும் முகம்கொடாது, தட்டிக்கழிக்க விரும்பினால் ஒரு விசாரணைக் கமிஷனையோ, ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவையோ அமைத்து, சர்வகட்சி மாநாட்டையோ ஒரு வட்டமேசை மாநாட்டையோ நடத்தி, அதனை முடிவில்லாமல் இழுத்தடிப்பது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியற் பாரம்பரியம். இதனையேதான் மஹிந்தவும் செய்கிறார். பற்றியெரியும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு நாம் வழங்கிய வாய்ப்புகளையும் உதாசீனம் செய்து, உதறித்தள்ளிவிட்டு, இந்த அனைத்துக் கட்சி மாநாட்டுக்குள் மஹிந்த பதுங்கிக் கிடக்கின்றார். அந்த அனைத்துக்கட்சிக்குழுவும்கடந்தபத்து மாதகாலமாக இருட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடியலைபவன் போல தமிழர் பிரச்சினையைத் தேடியலைந்து கொண்டிருக்கிறது.''

- இதுவும் சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் பிரபாகரன் கூறிய கருத்தே. இந்தக் கருத்துகளின் ஊடாகப் புலிகளின் தலைவர் சொல்ல வருவது என்ன?

செத்துச் செயலிழந்து, உக்கிப்போன தாளில் உருக்குலைந்து கிடக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத்தான் இன்னும் மதிப்பதாக சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக்கொண்டு - நடித்துக் கொண்டு - அந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக முழு யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது அரசு.

ஆக, யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு செயலில் அதற்கு மாறாக நடக்கும் - நடிக்கும் - இலங்கை அரசின் உண்மைச் சொரூபத்தை - உணர்ந்து கொள்ளுங்கள் - புரிந்து கொள்ளுங்கள் - என்பதையே இதனூடாக சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் எடுத்துரைக்க முனைகின்றனர்.

அதேசமயம் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அல்லது சர்வகட்சி மாநாடு என்று மஹிந்த அரசு கூட்டியிருக்கும் ஏற்பாடு கூட, சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு தந்திரோபாயம் - நாடகம் - என்பதையே புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது கடந்த வருட மாவீரர் தின உரையில் அம்பலப்படுத்துகின்றார். அதுவே, தமிழர் தரப்பின் இன்றைய கருத்தும் கூட.

அதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தம், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு என்பன மஹிந்த அரசின் நாடகங்கள் அரங்கேறுவதற்கான மூலோபாயங்கள் எனப் புலிகளும் தமிழர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்விடயங்களின் மஹிந்த அரசின் அரசியல் நடிப்பை - உண்மைச் சொரூபத்தை - உலகம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே புலிகளினதும் தமிழர் தரப்பினதும் வேணவா; எதிர்பார்ப்பு.

ஆனால் முழுப் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. கூட இவ்விடயங்களில் தமிழர் தரப்புக்கும் புலிகளுக்கும் ஆதரவாகச் செயற்படுகின்றது போலவே தோன்றுகின்றது; தென்படுகின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்த விடயத்திலும் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு விவகாரத்திலும் மஹிந்த அரசின் நடிப்புக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மை ரூபத்தை கவனத்தில் கொள்ளுங்கள் என்று புலிகளும் தமிழர்களும் வற்புறுத்த -

அந்த இரு விடயங்களிலும் மஹிந்த அரசு தனது வெளிவேடங்களையும் கலைத்துவிட்டு உண்மை ரூபத்தைக் காட்ட வேண்டும் என ஜே.வி.பியும் வற்புறுத்தியிருக்கின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக முறிக்கும் படியும், சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவை முற்றாகக் கலைத்து விடும்படியும் ஜே.வி.பி. நிபந்தனை விதித்திருப்பது, இவ்விடயங்களில் உண்மை நிலையை நிலைப்படுத்துமாறு தமிழர்களும், புலிகளும் விடுக்கும் கோரிக்கைக்கு முழு அளவில் ஒப்பானது.

இப்போதெல்லாம் புலிகளின் வேலையை - புலிகளுக்கு சார்பான பணிகளை தென்பகுதி ஜே.வி.பி. செய்வதாகவே தோன்றுகின்றது.

# ஆயிரத்து நானூறு கோடி ரூபாவுக்கு ஈரான் நாட்டிடமிருந்து ஆயுதங்கள்

கொழும்பு,நவ.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தேச ஈரான் விஜயம் பற்றிய செய்திகள் கசியவிடப்படாமல்மூடி வைக்கப்பட்டிருந்தாலும், இந்த விஜயத்தின்போது சுமார் ஆயிரத்து 400 கோடி ரூபா பெறுமதியான ஆயுதக் கொள்வனவுப் பேரம் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானுடனான மேற்படி ஆயுதக் கொள்வனவுப் பேரம் பிரேரிக்கப்பட்ட நிலையில் இன்னும் முடிவுறுத்தப்படாமல் இடையில் தட்டி நிற்கின்றது.

அதுவே, இம்முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்தின் போது இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்துக்கான திகதி, நிகழ்ச்சிநிரல் என்பன இன்னும் வெளிப்படுத்தப்படாவிட்டாலும் கூட, இந்த விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக இலங்கைக்கான ஈரான் தூதுவர் தெஹ்ரானுக்குத் திரும்பிச்சென்றிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

ஈரானுடன் மேற்கொள்ளவிருக்கும் ஆயிரத்து 400 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவில் 460 கோடி ரூபா பெறுமதியான விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் அடங்குகின்றனவாம்.

இராணுவத்துக்கு 460 கோடி ரூபாவுக்கும், கடற்படைக்கு 540 கோடி ரூபாவுக்கும், பொலிஸாருக்கு 48 கோடி ரூபாவுக்கும் ஆயுத தளபாடங்கள் இத்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

(சி)



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில், வாசிப்பு மாதத்தை ஒட்டி நடைபெற்ற விழாவில் பேச்சுப் போட்டியில் முதலிடம்பெற்ற சி.சங்கவைக்கு விழா்வின் பிரதம விருந்தினர் சுன்னாகம் ஹற்றன்நஷனல் வங்கியின் முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் பரிசு வழங்குகிறார். கல்லூரி நூலகர் திருமதி காஞ்சனமாலாவும் படத் தில் காணப்படுகின்றார்.

# ஆலய உற்சவத்தில் தவறிய நகை கையளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.19

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பெருந்திருவிழாவின் போது ஆலய வீதியில் கண்டெடுக்கப் பட்ட சங்கிலி கடந்த வாரம் உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது.

உற்சவ காலத்தில் ஆலய வீதியில் சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியைகளான செல்விகள் சத்தியபாமா மற்றும் உசாந்தினி ஆகியோரால் கண்டெடுக்கப்பட்ட கைச் சங்கிலி ஒன்று மாநகர சபையின் உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக் கப்பட் டிருந்தது.

கைச்சங்கிலியைத் தவறவிட்டதாக உற்சவகாலப் பணிமனையில் முறைப்பாடு செய்தவர்களை அழைத்து திருப்திகரமான ஆதாரங்களைச் சமர்ப்பித்தவரிடம் மாநகர சபையின் செயலாளரினால் மேற்படி ஆசிரியைகளின் முன்னிலையில் கைச்சங்கிலி கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பங்குகொண்ட மாநகர சபையின் செயலாளரும் சுகாதார வைத்திய அதிகாரியும் மேற்படி ஆசிரியைகளின் நேர்மையான செயலைப் பாராட்டினர்.

# கலைஞருக்கு காங்கிரஸ் கண்டனம்

புதுடில்லி,நவ.19

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழக முதல்வர் கருணாநிதி கவிதை எழுதியது காங்கிரஸாரின் உணர்வுகளைக் காயப்படுத்தும் செயல் என்று தலைநகர் டில்லியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' சர்வதேச அளவில் பயங்கரவாதி களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளனர். காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி யைப் படுகொலை செய்த அவர்களுக்கு எந்தவிதத்திலும் இரங்கலோ, புகழஞ் சலியோ செலுத்தக்கூடாது' - என்று கூட் டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச அரசியல் சூழல் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது என இந்திய நாளேடுகள்செய்திவெளியிட்டிருக்கின்றன.

# பெண் விமானியின் திறமையால் 311 பயணிகள் தப்பினர்!

கோவை,நவ.19

பெண் விமானியின் சாதுரியத்தால் கோவை விமான நிலையத்தில் நேரவிருந்த பெரும் விபத்துத் தவிர்க்கப்பட்டது. இரு விமானங்களிலும் இருந்த 311 பயணி களும் இதனால் உயிர்தப்பினர் என தகவல்கள் தெரிவித்தன.

கோவையிலிருந்து மும்பைக்கு 'எயார் டெக்கான்' நிறுவனமும் ஹைதராபாத் வழியாக டில்லிக்கு 'ஸ்பைஸ் ஜெட்' நிறுவனமும் விமானத்தை இயக்குகின்றன. 'எயார் டெக்கான்' விமானம் நேற்று முன்தினம் காலை 10.40 மணிக்கு வந்து, 11 மணிக்கு புறப்பட்டுச் செல்வது வழக்கம். சம்பவதினம் 10 நிமிடம் தாமதமாக வந்த இந்த விமானம், பயணிகளை இறக்கிவிட்டு மீண்டும் கோவையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படத் தயாராக விமான நிலைய 'ஏப்ரான்' பகுதியில் நின்றது.

டில்லி செல்லும் 'ஸ்பைஸ் ஜெட்' விமானம் சென்னையிலிருந்து 10.40 இற்கு கோவை வந்தது. அந்த விமானத்தை ஒரு பெண் விமானி ஓட்டிவந்தார். கோவையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு, புறப்படத் தயாராக அந்த விமானமும் 11.10 மணிக்கு 'ஏப்ரான்' பகுதிக்கு வந்தது. அப்போது அதே ஓடுபாதையில் 'எயார் டெக்கான்' விமானம் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பெண் விமானி, உடனடியாக விமானத்தை நிறுத்தினார். எனினும், இரு விமானங்களின் இறக்கைகளும் லேசாக உரசிக்கொண்டன.

இறக்கைகள் சற்று வேகமாக உரசியிருந்தாலும் பெரும் விபத்து ஏற்பட்டிருக்கும். பெரிய விபத்து தவிர்க்கப்பட்டதால், இரு விமானங்களிலும் இருந்த 311 பயணிகள் தப்பினர். மதியம் ஒரு மணியளவில் இரு விமானங்களும் கோவையிலிருந்து கிளம்பிச் சென்றன. சம்பவம் குறித்து உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பப்படும் என கோவை விமான நிலைய இயக்குநர் ஹேமலதா தெரிவித்துள்ளார்.

## நாளை

கார்த்திகை - 04 செவ்வாய் கிழமை
20.11.2007

திதி : தசமி
நட்சத்திரம் : பூரட்டாதி
முற்பகல் : 08.18
சுபநேரம் : 10.09 - 10.39
ராகுகாலம் : 03.09 - 04.39
[illegible] விரதம்

# ராகுல் காந்தியை கடத்த தீவிரவாதிகள் திட்டம்!

லக்னோ,நவ.19

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ராகுல் காந்தியை பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடத்தத் திட்டமிட்டிருந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

''ராகுல் காந்தியைக் கடத்தும் நோக்கில்தான் இந்தியா வந்தோம்'' - என கடந்த வெள்ளிக்கிழமை உத்தரப் பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர்கள் பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

தீவிரவாதிகளின் இந்த ஒப்புதல் வாக்குமூலங்களை நேற்று முதல் இந்தியத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

''பாகிஸ்தானிலுள்ள சிலர் பிறப்பித்த உத்தரவின்படி ராகுலைக் கடத்த இந்தியா வந்தோம். கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டும் பதற்றத்தை ஏற்படுத்தி அந்தத் தருணத்தில் அவரைக் கடத்தத் திட்டமிட்டிருந்தோம். ராகுலைக் கடத்துவதுதான் எங்கள் திட்டம்.

''சிறையில் அடைக்கப்பட்டுள்ள 42 கைதிகளின் பட்டியலைக் கொடுத்து, அந்தப் பெயர்களை நினைவில் கொள்ளும்படி பாகிஸ்தானில் எங்களிடம் கூறப்பட்டது. மேலும், ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள முசாபராபாத்தில் எங்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது'' - என்று பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் தீவிரவாதிகள் ஒப்புக்கொண்டனர்.

(சி)

# பாக். அவசரகால நிலையை உடனடியாக வாபஸ் பெற அமெ. மீண்டும் வலியுறுத்தல்

இஸ்லாமாபாத், நவ. 19

பாகிஸ்தானில் அவசர நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு முஷாரப்புக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. முஷாரப்பைச் சந்தித்துப் பேசியபோது அவரிடம் இதனைத் தெரிவித்தார் என அமெரிக்கத் துணை அமைச்சர் நெக்ரபோன்டே கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள நிலை குறித்து நேரில் பார்வையிட அமெரிக்கத் துணை அமைச்சர் நெக்ரேபோன்டே அங்கு விஜயம் செய்துள்ளார். நேற்றுமுன்தினம் அவர் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்துப் பேசினார்.

இந்நிலையில் நேற்று இஸ்லாமாபாத் தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவசரநிலையை முடிவுக்கு கொண்டுவருமாறு முஷாரப்பிடம் தாம் தெரிவித்ததாக சொன்னார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் இதுவரை 2,200 பேர் பலி!


உயிரிழந்த உறவுகளைத் தேடி..........

டாக்கா, நவ.19

பங்களாதேஷில் சிடார் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணியில் இராணுவக் கப்பல்கள், ஹெலிக்கொப்டர்கள் முழுவீச்சில் இறங்கியுள்ளன. மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்த ஐ.நா. மற்றும் ஐரோப்பிய நாடுகள் அதிகளவில் நிதி உதவி அளித்துள்ளன.

சிடார் சூறாவளியால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2,200 பேர்களை தாண்டிவிட்டதென கணிப்பீடுகள் தெரிவிக் கின்றன. அரச மதிப்பீட்டின்படி நேற்றுமாலை பலியானவர் களின் எண்ணிக்கை 2,206 என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

வங்காள விரிகுடா கடலில் கடந்த வாரம் தோன்றிய சிடார்புயல் கடந்த வெள்ளிக்கிழமை பங்களாதேஷின் கரையைக் கடந்தது. இந்தப் புயல் உருவானபோதே அதிபயங்கர சேதத்தை விளைவிக்கும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்திருந்தது. அது போலவே பங்களாதேஷில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

16 அடி உயரத்துக்கு எழுந்த இராட்சத அலைகளால் அந்த நாட்டின் தெற்குக் கடலோரக் கிராமங்கள் அனைத்தும் சின்னா பின்னமாகி விட்டன. மேலும் மணிக்கு 250 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த சூறைக்காற்றுடன் மழையும் பெய்ததால் ஏராளமான வீடுகள் இடிந்து வீழ்ந்தன. மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. தலைநகர் டாக்காவில் நேற்றும் கூட மின்சாரம் இல்லை.

சிடார் புயலுக்கு 1, 800 பேருக்கு மேல் பலியாகிவிட்டார்களென அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், 3 ஆயிரம் பேர் உயிரிழந்து இருக்கலாம் என்று அந்த நாட்டு செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன.

பங்களாதேஷைத் தாண்டி புயல் சென்று விட்டதால் பலியானவர்கள் மற்றும் காணாமற்போனவர்களை மீட்கும் பணியில் நேற்றுமுன்தினம் முதல் இராணுவக் ஹெலிக்கொப்டர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. மின்சாரம் இல்லாததால் நாடே இருளில் மூழ்கியுள்ளது. அதுதவிர மழை யும் தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் மீட்புப்பணிகள்தாமதமாகி வருகின்றன. எனவே, புயல் சேதம் குறித்த சரியான விவரங்கள் கிடைப் பதற்கு மேலும் சில நாள்கள் ஆகும்.

இதற்கிடையே நாட்டின் தெற்குக் கடலோர மாவட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். அவர்களுக்கு ஹெலிக்கொப்டர்கள் மூலமாக உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொண்டு நிறுவனங் களும் ஒவ்வொரு பகுதிகளை பிரித்தெடுத்து நிவாரண உதவி செய்து வருகின்றன.

அடுத்த மாதம் அறுவடைக்கு தயாராக இருந்த ஏராளமான நெற்பயிர்களும் வெள்ளத்தில் அழிந்துவிட்டன. வீடுகள், பொது மக்கள், பயிர்கள் என பேரழிவு ஏற்பட்டதால் பொருளாதார ரீதியாக பங்களாதேஷ் நாட்டுக்கு கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பல்வேறு உலக நாடுகளும் உதவிக் கரம் நீட்டி வருகின்றன.

ஜேர்மனி முதல் கட்டமாக ரூபா 20 கோடியை அளித்துள்ளது. இதுதவிர ஐரோப்பிய யூனியன் நாடுகள் சார்பாக ரூபா 81 கோடியும் ஐ.நா சார்பாக சுமார் 10 கோடி ரூபாயும் முதல் கட்ட உதவிகளாக வழங்கப் பட்டுள்ளன. மீட்புப் பணிகளில் உதவுவதற்காக இரண்டு கப்பல்கள் மற்றும் ஹெலிக் கொப்டர்களை அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது.

பங்களாதேஷை சூறாவளி தாக்குவது முதன் முறையல்ல. ஏற்கனவே 1970ஆம் ஆண்டு தாக்கிய கடும் சூறாவளியால் 5 லட்சம் மக்கள் பலியானார் கள். அதுபோல 1991ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலுக்கு ஒன்றரை லட்சம் பேர் இரையாகினர். (சி)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் பிற்பகல் 12.15 மணியளவில் ஊடுருவித் தாக்குதல் தொடுக்க முயன்ற விடுதலைப்புலி அணி ஒன்றின் மீது படையினர் சிறியரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டதில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் மத்திய நிலையம் மேலும் தெரிவிக்கின்றது.

வவுனியா - கள்ளிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்ற மோதலில் 5 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததுடன், புலிகளின் 3 பதுங்கு குழிகளும் தாக்கியழிக் கப்பட்டன என்றும் -

வவுனியா - தம்பனைப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்ற பிறிதொரு மோதலில் பெண்புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததுடன், தமது தரப்பில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் - படையினர் குறிப்பிட்டனர்.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் நிலக்கண்ணிவெடிகள் - 05, ரி - 56 ரகத் துப்பாக்கி - 01, அதற்குப் பயன்படுத்தப் படும்துப்பாக்கி ரவைகள் - 20 ஆகியன மீட்கப் பட்டன என்றும் படைத்தரப்பு வட்டாரங் கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த மோதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்று மாலை வரை வெளியாகவில்லை. (சி)

## கிழக்குத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டிருப்பது மற்றும் அவர்களுடைய பாதுகாப்பு திடீரென விலக்கப்பட்டது தொடர்பாக வெளியான செய்தி குறித்து பி.பி.சியின் சிங்கள சேவைக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அரசு விலக்கியிருக்கிறது.

அவர்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியே வந்து வரவு - செலவுத் திட்டத்தின்போது நாடாளுமன்றில் வாக்களிக்காமல் இருக்கச் செய்வதுதான் இதன் அர்த்தம்.

ஏனென்றால், கருணா மற்றும் பிள்ளையான் குழு என்பன அரசுடன் சேர்ந்துதான் செயற்படுகின்றார்கள். மக்கள் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்புத் தரவேண்டியது அரசின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை அரசே கை நழுவவிட்டிருக்கின்றது - என்று தெரிவித்தார் அத்தநாயக்கா. (சி)

**O/L மாணவர்களுக்கான ICT வழிகாட்டல் கருத்தரங்கு (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்)**

ஆசிரியர்:- திரு.வி.பாலா (MCP, Hon. Dip. In. IT)
(அனுபவம் வாய்ந்த கணனி விரிவுரையாளர்)
இடம்:- நியூ பிறைற் கல்வி நிலையம்
யா/ மாட்டின் வீதி
காலம்:- 24.11.2007
காலை 9-1 மணி வரை
* மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்
* முன் கூட்டியே பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.
(67997) இயக்குநர்.

## தமது ஆட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

மாவீரர்களின் ஈகங்கள் காரணமாக எமது விடுதலைப் பயணம் பெரும் இடர்களை தாண்டி வெற்றி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டம் இன்று ஒரு திருப்புமுனையான காலகட்டத்தில் நிற்கிறது. எதிரிகள் தூக்கமின்றி உள்ளனர். மகிந்த ராஷபக்ச தனது ஆட்சியின் பலாபலன்களை அனுபவிக்கும் காலம் நெருங்கி வருகிறது. இந்திய தமிழக அரசியல் எமது விடுதலைப் போராட்டத்திற்கு வாய்ப்பான சூழலை உருவாக்கி வருகிறது.

எமது விடுதலையை விரைவில் வென்றெடுக்க வேண்டிய நிலையில் தமிழினம் உள்ளது. மாவீரர்களை தொடர்ந்து விதைக்க முடியாது. விடுதலையை வென்றெடுக்க அனைவரும் மாவீரர்களின் கனவு சுமந்து அணி திரள்வோம் என்றார். (அ-1)

## 'பட்ஜெட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தும் நிகழ்வுக்கு வந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அச்சமயம் சற்று நேரம் பக்கத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்து உரையாடினர் என்று கூறப்படுகின்றது.

வரவு - செலவுத்திட்டத்தில் இந்த அரசு தோற்றாலும் நாடாளுமன்றைக் கலைக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் -

மாற்று அரசு அமைக்கும்படி ரணில் விக்கிரமசிங்கவையே தாம் அப்போது அழைப்பார் என்றும் -

ஜனாதிபதி அச்சமயம் ரணிலிடம் தெரிவித்தாராம்.

ஆனாலும் தற்போதைய நாடாளுமன்றத்துடன் புதிய அரசு அமைக்கும் எண்ணம் தமக்குக் கிடையவே கிடையாது என்பதை ஜனாதிபதிக்கு அச்சமயம் தெளிவுபடுத்திய ரணில் விக்கிரமசிங்க, அடுத்த அரசை அமைக்கும் முடிவை மக்களிடையே விட்டுவிட வேண்டும் என்பதையே தாம் அப்போது வற்புறுத்துவார் என்றும் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார் என்று அறிய வந்தது. (சி)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெறவுள்ள அரசின் வரவு - செல வுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிரட்டப்பட்டிருக்கின்றனர் என்று வெளியான செய்தி குறித்து பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட நாள்களாகவே கொழும்பில் தான் தங்கியிருக்கிறார்கள். கடந்த 18 மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் போகவேயில்லை. அவர்களுடைய குடும்பத்தினரின் பாதுகாப்பு விலக்கப்பட்டதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அவர்கள் எங்களுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று நாங்கள் எப்போதும் நினைத்ததும் இல்லை - என்றார். (சி)

## ஆட்சிக் கவிழ்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் நிலைப்பாடு என்னவென்று தெரியாத நிலையில் அடுத்த காய்நகர்த்தலை முன்னெடுக்க முடியாது ஐ.தே.க - மங்கள அணி தடுமாறிக் கொண்டிருந்ததையும் நேற்று அறியமுடிந்தது.

ஐ.தே.கட்சி - மங்கள அணியின் தற்போதைய ஆட்சிக்கவிழ்ப்பு எத்தனத்துக்கு ஆதரவு தரமுடியும் என்று ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா ஆகியவையும் அரசுத் தரப்பின் சில முன்னணி எம்.பிக்களும் கோடி காட்டியுள்ள போதிலும், ஆட்சிக் கவிழ்ப்பு முழு அளவில் சாத்தியம் என்பது திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டால்தான் அத்தகைய விஷப்பரீட்சையில் தாங்கள் இறங்கமுடியும் என்பதையும் அத்தரப்புகள் ஐ.தே.க. - மங்கள அணிக் கூட்டுக்குத் தெளிவுபடுத்திவிட்டன என்றும் அறியமுடிந்தது.

எனினும், ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தரமுடியும் என்பதை ஜே.வி.பி. உறுதிப்படுத்தாதவரை ஆட்சிக்கவிழ்ப்பு நிச்சயம் வெற்றிபெறுமா என்பதை தெளிவுபடுத்த முடியாமல் இருக்கிறது என ஐ.தே.க. - மங்கள அணிக்கூட்டு தெரிவித்திருக்கின்றது.

இன்று வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் அரசுக்கு எதிராக ஜே.வி.பி. வாக்களிப்பதை உறுதிப்படுத்த முடியாவிட்டால்-

ஆளும் தரப்புப் பக்கத்திலிருந்து கணிசமானோரை எதிர்க்கட்சித் தரப்புக்கு இழுத்து ஆட்சியைக் கவிழ்க்கும் தனது எத்தனத்தையும் ஐ.தே.க. - மங்கள அணிக்கூட்டு தற்காலிகமாக-இறுதி நேரத்தில்-தள்ளி வைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போதே அரசைக் கவிழ்க்கும் முயற்சி குறித்து ஆலோசிக்கப்படும என இன்று அறிவிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## எரித்திரியா தமிழீழப் பிரகடனத்தை ஆதரிக்கலாம் என்று அரசு அச்சம்

### அதனால் தூதரகம் அமைப்பதில் அவசரம்

கொழும்பு, நவ. 19

எரித்திரியாவில் தூதரகம் ஒன்றை நிறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு செய்துள்ளதாக அறியவந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எரித்திரியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக இலங்கைஅரசு கருதுகிறது.

அத்தகைய பின்னனியில் விடுதலைப் புலிகளின் தமிழீழ சுதந்திர பிரகடனத்துக்கு எரித்திரியா ஆதரவு அளிக்கக் கூடும் என்றும் இலங்கைஅரச வட்டாரங்களில் அச்சம் நிலவுகிறது.

அதனைத் தடுக்கும் முயற்சியாகவே அங்கு தூதரகம் ஒன்றை அமைக்க அரசு அவசர முடிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

எத்தியோப்பியாவில் இருந்து பிரிந்து 90 ஆண்டு மத்தியில் எரித்திரியா சுதந்திரப் பிரகடனம் செய்தமை குறிப்பிடத் தக்கது.

(அ-1)

## 'பட்ஜெட்'டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்துப் பணயமாக வைத்திருக்கும் அக்குழுவினர், சம்பந்தப்பட்ட எம்.பியுடன் தொலைபேசி மூலம் உரையாட அவரை அனுமதித்திருக்கின்றனர். அச்சமயம், திங்களன்று வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தால் கடத்தப்பட்டவரின் உயிருக்கு உலை வைக்கப்படும் என்றும் ஏனைய கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதேபோலவே கையாளப்படுவர் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். திங்களன்று அதாவது இன்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி இவ்விடயத்தைப் பகிரங்கப்படுத்துவோம்.

வெளிநாட்டுத் தூதரங்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் இது குறித்து அறிவித்திருக்கிறோம்.

எமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுவந்து முறைப்பாடு செய்யவிருக்கிறார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுக்கு ஒத்துழைத்தாலேயே அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கமுடியும்' - என்ற சாரப்பட ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் அவரின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துடனேயே இந்த விவகாரங்களை - எங்கள் எம்.பிக்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயத்தை - நாம் நோக்க வேண்டியுள்ளது.

- இப்படி மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கொலை அச்சுறுத்தல் தொடர்பாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ரோர் ஹக்ரெம், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் சொல்வ்பேர்க் ஆகியோரை தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் தொடர்பு கொண்டு இவ்விடயம் குறித்துத் தகவல் தெரிவித்துள்ளார் எனவும்தெரிவிக்கப்படுகிறது. (சி)

2008 - தரம்: 5 மாணவர்களுக்கான
வெற்றித் தேர்வு தி.நாலை த.கணேசலிங்கம் அவர்களின்
புலமைப்பரிசில் வெற்றித்தேர்வு - 8
புதன்கிழமை வெளியாகிறது.

தரம்: 4 முதல் O/Lவரை வருட இறுதி
முழு மாதிரி வினாத்தாள்கள்
இன்றே சகல புத்தகசாலைகளிலும்
அக்கடமி வெளியீடு என்று கேளுங்கள்

GRADE:6 2008 ENGLISH MEDIUM
தரமான, சிறப்பான ஆசிரியர்களின்
நேரடி வழிகாட்டலில் இலவச
கையேடுகளுடன்
செய்முறையோடு ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படும்.
ஒரு பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே.

தரம்: 4 முதல்O/L வரை
புதிய கல்வி சீர்திருத்தங்களோடு

கல்வியாண்டு - 2008 ற்கான
முழுப்பாடத்திட்ட
நிறைவிற்கான உறுதியோடு
புதிய வகுப்புக்களுக்கான அனுமதிகள்
இன்று முதல் வழங்கப்படுகின்றன.

சயன்ஸ் அக்கடமி
(68062) அரியாலை, நல்லூர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org